# அரையாண்டு பொதுத் தேர்வு - 2019

## பத்தாம் வகுப்பு

Reg.No. | | | | | | |

நேரம்: 3.00 மணி

## சமூக அறிவியல்

மதிப்பெண்கள்: 100

அறிவுரை :

1) அனைத்து வினாக்களும் சரியாக பதிவாகி உள்ளதா என்பதனை சரிபார்த்துக் கொள்ளவும். அச்சுப் பதிவில் குறையிருப்பின் அறைக் கண்காணிப்பாளரிடம் உடனடியாகத் தெரிவிக்கவும்.

2) நீலம் அல்லது கருப்பு மையினை மட்டுமே எழுதுவதற்குப் பயன்படுத்த வேண்டும். படங்கள் வரைவதற்கு பென்சில் பயன்படுத்தவும்.

### பகுதி - I

14 x 1 = 14

குறிப்பு : i) இப்பிரிவில் உள்ள அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.

ii) கொடுக்கப்பட்ட நான்கு மாற்று விடைகளில் மிகவும் சரியான விடையைத் தேர்ந்தெடுத்து குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதவும்.

1. லேட்டர்ன் உடன்படிக்கை கையெழுத்தான ஆண்டு

   a) 1929 b) 1928 c) 1930 d) 1927

2. வம்போவா இராணுவக் கழகத்தின் முதல் இயக்குநர் யார்?

   a) சன் யாட் சென் b) ஷியாங் கே-ஷேக்

   c) மைக்கேல் பொரோடின் d) சூ-யென்-லாய்

3. வேலூர் புரட்சி எப்போது வெடித்தது?

   a) 1805 மே 24 b) 1805 ஜூலை 10

   c) 1806 ஜூலை 10 d) 1806 செப்டம்பர் 10

4. அமிர்தசரஸில் ரௌலட் சட்ட எதிர்ப்புப் போராட்டங்களின் போது கைது செய்யப்பட்டவர் யார்?

   a) மோதிலால் நேரு b) சைஃபுதீன் சிச்லு

   c) முகம்மது அலி d) ராஜ்குமார் சுக்லா

5. கூற்று : சென்னை மாகாணத்தில் 1920 முதல் 1937 வரை நீதிக்கட்சி தொடர்ந்து ஆட்சியில் இருந்தது.

   காரணம் : இக்கால கட்டத்தில் இரட்டையாட்சிக்கு எதிராக காங்கிரஸ் ஆட்சி சட்டமன்றத்தைப் புறக்கணித்தது.

   a) காரணம், கூற்று ஆகியவை சரி.

   b) கூற்று சரி, ஆனால் காரணம் கூற்றின் சரியான விளக்கமல்ல.

   c) கூற்று மற்றும் காரணம் இரண்டும் தவறு.

   d) காரணம் சரி, ஆனால் கூற்றுடன் அது பொருந்தவில்லை

6. பொருந்தாததைத் தேர்ந்தெடுக்கவும்.

   a) நெல் b) கோதுமை c) இரப்பர் d) பருப்பு வகைகள்

7. தக்காண பீடபூமியின் பரப்பளவு _______ சதுர கி.மீ ஆகும்.

   a) 6 லட்சம் b) 8 லட்சம் c) 5 லட்சம் d) 7 லட்சம்

8. _______ போக்குவரத்து நேரடியாக உற்பத்தியாளரையும் நுகர்வோரையும் இணைக்கிறது.

   a) ரயில்வே b) சாலை c) வான்வழி d) நீர்வழி

9. தமிழ்நாட்டில் உள்ள மிக உயரமான சிகரம் _______ ஆகும்.

   a) ஆனைமுடி b) தொட்டபெட்டா c) மகேந்திரகிரி d) சேர்வராயன்

10. தென்னிந்தியாவின் நெற்களஞ்சியம் என்று அழைக்கப்படும் டெல்டா _______.

    a) காவிரி டெல்டா b) மகாநதி டெல்டா

    c) கோதாவரி டெல்டா d) கிருஷ்ணா டெல்டா

11. நமது அடிப்படை உரிமைகளை ________ இடமிருந்து பெற்றோம்.
   a) அமெரிக்க அரசியலமைப்பு   b) கனடா அரசியலமைப்பு
   c) ரஷ்யா அரசியலமைப்பு   d) ஐரிஷ் அரசியலமைப்பு
12. எத்தனை இந்திய மாநிலங்கள் நேபாளத்துடன் தங்கள் எல்லையைப் பகிர்ந்து கொள்கின்றன?
   a) ஐந்து   b) நான்கு   c) மூன்று   d) இரண்டு
13. உலக வர்த்தக அமைப்பின் தலைமையகம்
   a) ஜெனிவா   b) நியூயார்க்   c) டோக்கியோ   d) பாரிஸ்
14. சரியில்லா கூற்றைத் தேர்ந்தெடுக்கவும்.
   i) இயற்கையாகவோ அல்லது செயற்கையாகவோ பண்டங்களின் பற்றாக்குறை கருப்பு பணத்திற்கு மூலக் காரணமாகும்.
   ii) கருப்பு பணம் தோன்றுவதற்கு மிக் முக்கிய பங்கு வசிப்பது தொழிற்துறையாகும்.
   iii) கருப்பு பணம் உருவாவதற்கு கடத்தல் ஒரு முக்கிய மூலமாகும்.
   iv) வரி விகிதம் குறைவாக இருக்கும் போது அதிக கருப்பு பணம் தோன்றுகிறது.
   a) (i) மற்றும் (ii)   b) (iv)   c) (i)   d) (ii) மற்றும் (iii)

## பகுதி - II

**எவையேனும் 10 வினாக்களுக்கு விடையளி:** 10 x 2 = 20

*(வினா எண்.28 க்கு கட்டாயமாக விடையளிக்கவும்)*

15. மூவர் கூட்டு நாடுகளின் பெயர்களைக் குறிப்பிடுக.
16. முதல் உலகப்போருக்குப் பிந்தைய உலகத்தின் மூன்று முக்கிய சர்வாதிகாரிகள் யாவர்?
17. பிரம்ம சமாஜத்தால் ஒழிக்கப்பட்ட சமூகத் தீமைகள் யாவை?
18. வாரிசு இழப்புக் கொள்கையின் அடிப்படையில் பிரிட்டிஷ் அரசில் இணைத்துக் கொள்ளப்பட்ட பகுதிகளைப் பட்டியலிடவும்.
19. தொழில் முனைவு என்றால் என்ன?
20. இந்தியாவின் கிழக்கு நோக்கி பாயும் ஆறுகளைப் பற்றிக் கூறுக.
21. 'ஜெட் காற்றோட்டங்கள்' என்றால் என்ன?
22. நிலக்கரியின் வகைகளைக் கரிம அளவுகளுடன் எழுதுக.
23. தமிழ்நாட்டின் எல்லைகளைக் குறிப்பிடுக.
24. உச்ச நீதிமன்ற நீதிபதி ஆவதற்கான தகுதிகள் யாவை?
25. சார்க் உறுப்பு நாடுகளைப் பட்டியலிடுக.
26. நாட்டு வருமானம் - வரையறுக்கவும்.
27. உணவு மற்றும் ஊட்டச்சத்து பாதுகாப்பின் அடிப்படைக் கூறுகள் யாவை?
28. அன்னிபெசன்ட் அம்மையார் எழுதிய புத்தகங்கள் மற்றும் அவர் தொடங்கிய செய்தித்தாள்களின் பெயர்களை எழுதுக.

## பகுதி - III

**எவையேனும் 10 வினாக்களுக்கு விடையளி:** 10 x 5 = 50

*(வினா எண்.42 க்கு கட்டாயமாக விடையளிக்கவும்)*

29. i) வியட்நாம் தேசியவாதிகள் கட்சி ________ இல் நிறுவப்பட்டது.
   ii) ________ பருவக்காற்று தமிழ்நாட்டிற்கு முக்கிய நீர் ஆதாரமாக உள்ளது.
   iii) தேயிலை மற்றும் காபி செடிகள் பயிரிடுவதற்கு ஏற்ற மண் ________ ஆகும்.
   iv) ஆளுநர் தனது இராஜினாமா கடிதத்தை ________ இடம் கொடுக்கிறார்.
   v) ________ என்பது ஒரு அலகு பணம் வாங்கக்கூடிய பொருட்கள் மற்றும் சேவைகளின் அளவின் அடிப்படையில் வெளிப்படுத்தப்படும் நாணயத்தின் மதிப்பாகும்.
30. ஜாலியன்வாலா பாக் படுகொலை பற்றி விவரிக்கவும்.
31. தமிழ்நாட்டின் தோட்ட வேளாண்மை பற்றி விளக்குக.

32. a) வேறுபடுத்துக:
   i) காரிஃப் பருவம் மற்றும் சையத் பருவம்
   ii) தமிழகத்தின் மேற்கு தொடர்ச்சி மலைகள் மற்றும் கிழக்கு தொடர்ச்சி மலைகள்

   b) காரணம் கூறுக:
   வட இந்திய ஆறுகள் வற்றாத ஆறுகள்

33. வியட்மின் கட்சியின் உதயம் குறித்து விவரிக்கவும்.

34. சட்டமறுப்பு இயக்கத்தில் தமிழ்நாடு வகித்த பாத்திரத்தை விவரி.

35. தீவிர வேளாண்மை மற்றும் வறண்ட நில வேளாண்மையின் பண்புகளை வெளிக்கொணர்க.

36. தமிழ்நாட்டின் பருத்தி நெசவாலைகள் மற்றும் பட்டு நெசவு ஆலைகள் பற்றி விளக்குக.

37. சட்டமன்றத்தின் பணிகளை சுருக்கமாக விவாதிக்க.

38. பிரிக்ஸ் (BRICS) கூட்டமைப்பு உருவாவதற்கான காரணம் மற்றும் அதன் நோக்கங்களை எழுதுக.

39. MNC யின் நன்மைகள் மற்றும் தீமைகளை விவரிக்கவும்.

40. பொருளாதார முன்னேற்றத்தில் வரி விதிப்பின் பங்கினை விளக்கவும்.

பார்வையற்ற மாணவர்கள் காலக்கோடு மற்றும் வரைபடத்தில் முறையே நிகழ்வுகளையும், இடங்களையும் குறிப்பிட்டுக் காட்டுவதற்கு பதிலாக அவற்றைப் பற்றிய குறிப்புகள் மட்டும் எழுத வேண்டும்.

41. கீழ்க்காண்பனவற்றிற்கு காலக்கோடு வரைக:
   1900 முதல் 1940 வரையிலான ஐந்து முக்கிய நிகழ்வுகளைக் காலக்கோட்டில் எழுதுக.

42. இந்திய வரைபடத்தில் கீழ்க்காணும் இடங்களைக் குறிக்கவும்.
   i) லக்னோ ii) ஆக்ரா iii) மதராஸ் iv) ஜான்சி
   v) ஜாலியன்வாலா பாக் (அமிர்தசரஸ்)

## பகுதி - IV

**அனைத்து வினாக்களுக்கும் விடையளி:** 2 x 8 = 16

43. a) பன்னாட்டுச் சங்கத்தின் பணிகளை மதிப்பிடுக. அதன் தோல்விக்கான காரணங்களையும் குறிப்பிடுக. ***(அல்லது)***

   b) சுயமரியாதை இயக்கத்தைப் பற்றி விவரிக்கவும்.

44. a) கொடுக்கப்பட்டுள்ள இந்திய வரைபடத்தில் பின்வருவனவற்றைக் குறிக்கவும்.
   i) வடகிழக்கு பருவக்காற்று வீசும் திசை
   ii) சணல் விளையும் பகுதிகளைக் குறிக்கவும்.
   iii) கிழக்கு இந்திய கடற்கரையில் அமைந்துள்ள ஒரு முக்கிய துறைமுகம்
   iv) பாலை மண்
   v) மன்னார் வளைகுடா
   vi) மும்பை முதல் சென்னை வரையிலான ரயில்பாதை
   vii) மேட்டூர் அணை
   viii) சுந்தரவனம் ***(அல்லது)***

   i) ஆரவல்லி
   ii) மேற்கு தொடர்ச்சி மலை
   iii) காவேரி ஆறு
   iv) கரிசல் மண் காணப்படும் பகுதிகளைக் குறிக்கவும்
   v) கரும்பு விளையும் பகுதிகளைக் குறிக்கவும்
   vi) மலைக்காடுகள்
   vii) பண்ணா உயிர்க்கோள காப்பகங்கள்
   viii) கோயம்புத்தூர்

******